சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 184 | 28.12.2025 | SUNDAY | MARGAZHI : 13 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 184 | 28.12.2025 | ஞாயிற்றுக்கிழமை | மார்கழி : 13 | விலை : ரூ.5/-

3 "சமூக நீதி குறித்து பேசுவதற்கு திமுகவுக்கு தகுதியில்லை" : மதுரையில் அன்புமணி பேட்டி

4 திருப்பூர் மாவட்டம் மீன் வியாபாரிகள் நல சங்க ஆலோசனைக் கூட்டம்

2 என்னோடு நேருக்கு நேர் விவாதிக்க தயாரா? முதல்வருக்கு இபிஎஸ் சவால்

## புறமுதுகு காட்டி ஓடும் பழனிசாமிக்கு

# "ஓபன் சேலஞ்ச் தேவையா?"

## திமுக பயங்கர பதிலடி...

சென்னை: டிச.28-

"சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் எழுப்பிய கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லாமல் வெளிநடப்பு என புறமுதுகு காட்டி ஓடும் எடப்பாடி பழனிசாமிக்கு ஓபன் சேலஞ்ச் என பீலா தேவையா?" என திமுக பதிலடி கொடுத்துள்ளது.

இது குறித்து தமிழக சட்டத் துறை அமைச்சர் ரகுபதி வெளியிட்ட அறிக்கையில், "கள்ளக்குறிச்சியில் ஓபன் சேலஞ்ஜ் விடுத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பதில் தருவதாக நினைத்து, உளறிக் கொட்டியிருக்கும் எதிர்க்கட்சித் தலைவரே...

திமுக அரசு விஷயம் என்றால், முழித்துக் கொள்வதும், ஒன்றிய அரசு விவகாரமாக இருந்தால் கண்ணை மூடிக்கொள்வதும் என உங்கள் செயல்பாடு உருமாறுவது உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா? அமித் ஷா முன்பு செய்தியாளர்களிடம் பேச அஞ்சும் பழனிசாமி, சூனா பானா வேடம் தரிக்கிறார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உருவாக்கினால் போதுமா? பெயர் வைத்தால் குழந்தை தானாக வளர்ந்துவிடுமா? அந்தக் குழந்தைக்குச் சத்தான உணவைத் தர வேண்டாமா? மாவட்டத்தை உருவாக்கினால், அதனை நிர்வகிக்கக் கட்டடம் வேண்டாமா?

கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டி வளாகத்தில் தற்காலிகமாக கலெக்டர் அலுவலகத்தை






வைத்துவிட்டுப் போனீர்கள். திமுக அரசு வந்த பிறகுதான் 2024 செப்டம்பரில் புதிய கலெக்டர் அலுவலகக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. எதையும் டிவியை பார்த்துத் தெரிந்து கொள்ளும் பழனிசாமிக்கு இது தெரியாதா? அப்படி அடிக்கல் நாட்டப்பட்ட கட்டடத்தை முதல்வர் திறந்து வைத்ததும் ஏன் எரிகிறது?

'அதிமுக ஆட்சியின் திட்டங்களுக்கு ரிப்பன் வெட்டி ஸ்டிக்கர் ஒட்டுகிறோம்' என்கிறார் பழனிசாமி. 2015ல் சென்னையில் பெருவெள்ளம் ஏற்பட்டபோது, தனியாரும் தன்னார்வலர்களும் அளித்த நிவாரணப் பொருட்களில் எல்லாம் தேடித் தேடி ஜெயலலிதாவின் படத்தை ஸ்டிக்கர் ஒட்டியவர்கள்தானே நீங்கள்.

பட்ஜெட் சூட்கேஸ், குதிரை, குழந்தை, மணமக்கள் என எதையும் விட்டு வைக்காமல் அவர்கள் மீதெல்லாம் ஸ்டிக்கர் ஒட்டி தமிழ்நாட்டின் மானத்தை அகில உலகுக்கும் காட்டியவர்களுக்கு எப்போதும் ஸ்டிக்கர் பற்றிய நினைப்புதான் இருக்கும்.

பரமக்குடி துப்பாக்கிச் சூடு, தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, கிரானைட் கொள்ளை, கொடநாடு கொலைகள், கூவத்தூர் கூத்துகள், மவுலிவாக்கம் கட்டட விபத்து, மக்கள் நலப் பணியாளர்கள் போராட்டம், தருமபுரி கலவரம், சாத்தான்குளம் இரட்டை மரணம், நிர்மலா தேவி விவகாரம், ஜல்லிக்கட்டு போராட்டம் என சந்தி சிரித்தது எல்லாம் யாருடைய ஆட்சியில்?

இதில் சிறப்பான ஆட்சியைக் கொடுத்தாராம். உங்களுக்குக் கொஞ்சம் கூட வெட்கமாக இல்லையா? இன்னும் பட்டியல் போட முடியும். நீங்கள் மூச்சு இரைக்க வாசிக்க வேண்டியிருக்கும் என்பதால் குறைத்துச் சொல்லியிருக்கிறோம்.

20 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் என்று சொன்னதும் பழனிசாமியின் அடிவயிறு ஏன் எரிகிறது? தேர்தல் வாக்குறுதி என்பது 5 ஆண்டுகளில் நிறைவேற்றுவது. அதனை ஏன் நான்கரை ஆண்டுகள் கழித்துக் கொடுக்கிறீர்கள் எனக் கூச்சமே இல்லாமல் கேள்வி எழுப்புகிறார் பழனிசாமி.

அதிமுக ஆட்சியில் ஜெயலலிதா கொண்டு வந்த லேப்டாப் திட்டத்தை நாங்கள் முடக்க நினைக்கவில்லை. அதனால்தான் அந்தத் திட்டத்தைத் தொடர்கிறோம். ஆனால், எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் 2019ஆம் ஆண்டு வரை மட்டுமே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். ஜெயலலிதா கொண்டு வந்த திட்டத்தையே முடக்கிவிட்டு பேச்சை பாருங்கஞ் எகத்தாளத்தை பாருங்கஞ் லொள்ள பாருங்க..!

'என்னோடு நீங்கள் நேருக்கு நேர் மேடை ஏறத் தயாரா? அதிமுக ஆட்சி பற்றி நீங்கள் என்ன கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயார். திமுக ஆட்சி பற்றி எனது கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லத் தயாரா?' என கேட்டிருக்கிறார். இதற்கு எதற்கு மேடை போட வேண்டும்?சட்டமன்றத்தில்தான் நேருக்கு நேர் பேசலாமே! அங்கே முதல்வர் எழுப்பிய கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லாமல் வெளிநடப்பு என புறமுதுகு காட்டி ஓடுபவருக்கு ஓபன் சேலஞ்ச் என பீலா தேவையா?' எனத் தெரிவித்துள்ளார்.



■ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் திட்ட குறிக்கோள் மற்றும் செயல்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட மாவட்ட செயலாக்க குழு மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சரவணக்குமார், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் திரு.சுரேஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

## "அதிமுக, பாஜக கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணையும்" : நயினார் நாகேந்திரன்

மதுரை: டிச.28-

"அதிமுக பாஜக கூட்டணியில் எந்தெந்த கட்சிகள் சேரும் என்பது பொங்கல் முடிந்ததும் தெரியவரும்" என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனின், தமிழகம் தலை நிமிர, தமிழனின் பயண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் இன்று மதுரை வந்தார்.

விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தமிழக முதல்வர் மிகப் பெரிய தவறு இழைத்துள்ளார். நீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல், நீதிபதி மீது நாடாளுமன்றத்தில் இம்பீச்மென்ட் கொண்டு வந்தது மிகப் பெரிய தவறான முன்னுதாரணமாகும். இது மக்கள் மத்தியில் கொழுந்து விட்டு எரிகிறது.

பூர்ணசந்திரன் தன்னைத் தானே எரித்துக் கொண்டார். திருப்பரங்குன்றத்தில் தீக்குளித்தால் கோயிலின் புனிதம் கெடும் என கருதி கடவுள் மறுப்பை கொள்கையாக கொண்ட பெரியார் சிலை முன்பு தீக்குளித்து உயிரிழந்தார்.

இதையடுத்து உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என நினைக்கின்றனர். அந்த அடிப்படையில் திருப்பரங்குன்றம் மக்கள் மலையில் தீபம் ஏற்ற வேண்டும் என பொங்கல் வைத்து வழிபட்டு வருகின்றனர். இது வரவேற்புக்குரியது.

தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர்கள், செவிலியர்கள் பணி நிரந்தரம் கோரி போராடி வருகின்றனர். ஜன.6 முதல் ஜாக்டோ ஜியோ போராட்டம் அறிவித்துள்ளனர். பழைய ஓய்வூதியம் திட்டம் கோரி அரசு ஊழியர்கள் போராட உள்ளனர். தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை. இப்போராட்டங்கள் ஏப்ரல் மாதம் நடைபெறும் தேர்தலில் முடிவுக்கு வரும்.

அதிமுக பாஜக கூட்டணிக்கு வேறு எந்தெந்த கட்சிகள் வரும் என்பது பொங்கல் முடிந்ததும் தெரியும். தற்போதுள்ள அதிமுக பாஜக கூட்டணி இருந்தாலே தேர்தலில் வெற்றி பெறும். பல கட்சிகள் வந்தால் பலமான கூட்டணி அமையும். எந்தக் கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம் என்பது பொங்கல் முடிந்ததும் தெரிவிப்போம்" என்று அவர் கூறினார். பேட்டியின் போது பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் ராஜரத்தினம் உட்பட பலர் உடனிருந்தனர்.



■ மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், திப்பம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை துவக்கி வைத்து, பார்வையிட்டார். உடன் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.இ.பிரகாஷ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி.பிரியா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, சென்னிமலை பேரூராட்சித்தலைவர் திருமதி.ஸ்ரீதேவி உட்பட பலர் உள்ளனர்.

## தமிழ்நாட்டு மக்களை பழிவாங்க அதிமுக, பாஜக கூட்டணி கட்சிகள் செயல்படுகிறது : கலிக்கம்பட்டியில் நடைபெற்ற அங்கன்வாடி திறப்புவிழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

### அமலாகத்துறையின் வழக்கிற்கு பயப்படுகிறவன் நான் அல்ல : அமைச்சர் ஐ.பெரியசாமி சவால்

சின்னாளபட்டி, டிச.28

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், ஆலமரத்துப்பட்டி ஊராட்சி போக்குவரத்து நகரில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்டத் குடிநீர் தொட்டி ரூ.13.53 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக்கடை, கலிக்கம்பட்டி ஊராட்சி கோட்டைப்பட்டியில் ரூ.17.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிட திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்டட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமை தாங்கினார். திமுக மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பூங்கொடி, ஆத்தூர் ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார குழந்கைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் வாசுகி வரவேற்றார். விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தண்ணீர் தொட்டியை தொடங்கி வைத்து குடி தண்ணீர் வழங்கிய பின்பு, அருகில் உள்ள அங்கன்வாடி மையக்கட்டிடத்தை திறந்துவைத்து, குழந்தைகளுக்கு



இனிப்புகள் வழங்கிய பின்பு பொதுமக்கள் மத்தியில் பேசிய அவர், தமிழ்நாட்டில் உள்ள எடப்பாடி தலைமையிலான அதிமுக, மோடி தலைமையிலான பாஜக, மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் தமிழ்நாட்டு மக்களை பழிவாங்கும் நோக்கோடு செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை பெயர் மாற்றியதுடன் வேலைநாட்களையும் குறைத்துள்ளது. தமிழகத்தில் 12,253 கிராம ஊராட்சிகள் உள்ளன. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 1 லட்சத்தி 25 ஆயிரம் கோடி நிதி நூறு நாள் வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. அதன் பின்னர் வந்த பாஜக ஆட்சியில் 65 ஆயிரம் கோடி, 42 ஆயிரம் கோடி. தற்போது 16 கோடிதான் வழங்கப்படுகிறது. இதன் மூலம் இனிமேல் பத்துக்கு இரண்டு பேருக்குத்தான் வேலை வழங்கும் சூழ்நிலை உருவாகிவிட்டது. இதற்கு காரணம் பாஜக அரசு மட்டுமின்றி, அதனுடன் கூட்டணி வைத்திருக்கும் எடப்பாடி தலைமையிலான அதிமுகவும்தான் என்றார். தமிழ்நாட்டு மக்களை பழி வாங்கும் நோக்கோடு செயல்படும் ஒன்றிய அரசுக்கு துணையாக அதிமுகவும் உள்ளது. நீங்கள் இவர்களுக்கு வாக்களிக்கலாமா, என கேள்வி எழுப்பினார். அப்போது மக்கள் எத்தனை முறை போட்டியிட்டாலும் ஆத்தூர் தொகுதியில் எங்கள் வாக்கு உங்களுக்குத்தான், நீங்கள்தான் வெற்றி பெறுவீர்கள் என சத்தம் எழுப்பினார்கள்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், ராஜேந்திரன், வசந்தா கென்னடி, ஒன்றிய மாவட்ட காங்கிரஸ் துணை செயலாளர் மச்சகாளை, திமுக ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் ஜெயராமன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் உலகநாதன், ஆறுமுகம், கோமதி செல்வக்குமார், செட்டியபட்டி ராஜா, அரசு ஒப்பந்த காரர்கள் ஜீசஸ் அகஸ்டீன், மெல்வின், விக்னேஸ்வரன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.என்.போஸ், மாவட்ட தகவல் தொழில்நுட்ட அணி ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் பஞ்சம்பட்டி மணி, விடுதலை முருகன், ஊராட்சி செயலர்கள் அழகர்சாமி, தண்டபாணி, அம்பாத்துரை செந்தில்குமார் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# மக்கள் மீது திமுகவினர் தாக்குதல் நடத்துவதை முதல்வர் வேடிக்கை பார்க்கலாமா: நயினார் கேள்வி



சென்னை, டிச.28-

அப்பாவி மக்கள் மீது திமுகவினர் தாக்குதல் நடத்துவதை முதல்வர் ஸ்டாலின் வேடிக்கை பார்க்க கூடாது என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் வலிறுத்தி உள்ளார்.

அவரது அறிக்கை: சென்னையில் இரு வாகன உரிமையாளர்களுக்கு இடையிலான மோதலைக் கட்டப் பஞ்சாயத்து செய்து தீர்க்க வந்த சேப்பாக்கம் பகுதி திமுக 63வது வட்டச் செயலாளர், காதுகள் கூசும் அளவிற்குக் கெட்ட வார்த்தைகளால் பேசும் வீடியோ வெளியாகியுள்ளது.

இப்படி எந்தவொரு அதிகாரமும் நாகரிகமுமின்றி பொதுமக்களை வாய்க்கு வந்தபடி வசைபாடும் நபர்கள் தொடங்கி பெண்களின் பாதுகாப்பைச் சூறையாடும் காமுகர்கள் வரை அனைத்து உடன்பிறப்புகளையும் ஆளுங்கட்சி திமிரை ஊட்டி வளர்த்துவிட்டு, மேடைகளில் மட்டும் பகுத்தறிவு பாடம் எடுப்பது தான் திமுக அரசின் திராவிட மாடலா?

ஆமாம், பொது மேடையில் வைத்தே அமைச்சர் பொறுப்பில் இருந்து கொண்டே பெண்களைப் பற்றி ஆபாசமாகப் பேசும் மூத்த தலைவர்களைக் கொண்ட கட்சி, எப்படி வளர்ச்சி அரசியலை முன்னெடுக்கும்? ரவுடிகளை மட்டும் தான் வளர்த்துவிடும். இத்தகைய கருப்பு சிவப்புப் படையைக் கைக்குள் வைத்துக்கொண்டு, தமிழகத்தைத் தலைகுனிய விடமாட்டேன் என்று முழங்குவது வெட்கக்கேடு.

தாங்கள் வகிக்கும் பதவியின் பொறுப்புணர்ந்து உடனடியாக, அவதூறாகப் பேசிய வட்டச்செயலாளர் மீதும், இருசக்கர வாகன உரிமையாளரைத் தாக்கிய கார் உரிமையாளரின் மீதும் வழக்குப் பதிய உத்தரவிடுங்கள். அப்பாவி மக்கள் மீது திமுகவினர் தாக்குதல் நடத்துவதை முதல்வர் ஸ்டாலின் வேடிக்கை பார்க்க கூடாது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

# என்னோடு நேருக்கு நேர் விவாதிக்க தயாரா? முதல்வருக்கு இபிஎஸ் சவால்



சென்னை, டிச.28-

என்னோடு நீங்கள் நேருக்கு நேர் மேடையில் விவாதிக்க தயாரா? என முதல்வர் ஸ்டாலினுக்கு அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் சவால் விடுத்துள்ளார்.''நெஞ்சை நிமிர்த்தி காலரை உயர்த்தி தமிழகம் முன்னேறுகிறது. இதில் 5 சதவீதமாவது அதிமுக ஆட்சியில் நடந்ததா? அவர்களால் சொல்ல முடியுமா? இது என்னுடைய ஓபன் சேலஞ்ச். தைரியம் இருந்தால் அவர்கள் சொல்லட்டும்,'' என முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பி இருந்தார். இதற்கு பதில் அளித்து இபிஎஸ் வெளியிட்ட அறிக்கை: நேற்று கள்ளக்குறிச்சியில் மேடை ஏறி ஓபன் சேலஞ்ஜ் விடுத்த முதல்வரே. நீங்கள் மேடை போட்டு பேசிய அந்த கள்ளக்குறிச்சி மாவட்டமே எனது தலைமையிலான அதிமுக ஆட்சியில் தான் உருவானது என்பது உங்களுக்கு தெரியுமா? தெரியாதா?நீங்கள் நின்று பேசிய அதே கள்ளக்குறிச்சியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி சொல்லும், அதிமுக ஆட்சியின் சாதனை என்னவென்று. அதிமுக ஆட்சியின் திட்டங்களுக்கு ரிப்பன் வெட்டி ஸ்டிக்கர் ஒட்டுவதையே 95% வேலையாகக் கொண்ட நீங்கள், 5% திட்டங்கள் பற்றி எல்லாம் கேள்வி கேட்கலாமா? அதற்கு கொஞ்சமாவது உங்களுக்கு தகுதி இருக்கிறதா?

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கை, பெண்கள் பாதுகாப்பைச் சீர்குலைத்துவிட்டு, எங்கு திரும்பினாலும் ஆசிரியர்கள், நர்சுகள், அரசு ஊழியர்கள், மாற்றுத் திறனாளிகள் என அனைவரையும் நடுத்தெருவில் போராட நிறுத்திவிட்டு, சிஷீறீ றீணீகூஷீ ஐ தூக்கி விட்டு பேசுகிறீர்களே. உங்களுக்கு கொஞ்சம் கூட வெட்கமாக இல்லையா?20 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் என்று போகிற போக்கில் அளந்து விட்டால் மக்கள் நம்பி விடுவார்களா? எத்தனை லேப்டாப் யாருக்கு போய் சேர்ந்தது?தேர்தல் பயத்தில், நான்கரை ஆண்டுகள் கொடுக்காமல் தற்போது அவசர கதியில் அரைகுறையாக கொடுக்கப் போவதை பெருமை பேச உங்களுக்கு கூச்சமாக இல்லையா? செல்போன் ரீசார்ஜ் செய்தாலே ஓராண்டுக்கு கிமி சந்தா இலவசமாக கிடைக்கும் நிலையில், அதே கிமி சந்தாவை 6 மாதத்திற்கு மட்டுமே வழங்கப் போவதாக தெரிவித்துள்ளது உங்கள் விடியா அரசு. இதெல்லாம் எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை என்பதை அறிவார்ந்த மாணவர்களுக்கு தெரியும்.

முதல்வர் ஸ்டாலின் மூச்சு இரைக்க வாசித்த பட்டியல் என்பது, நீங்கள் நடத்திய போட்டோஷூட்களின் பட்டியல். இதேபோல், நீங்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் எத்தனையை நிறைவேற்றி னீர்கள் என்பதையும் இதேபோல் வாசிக்கத் தயாரா? (கவலை வேண்டாம். மூச்சு இரைக்க வாய்ப்பே இல்லை!) அப்புறம்... ஏதோ ளிஜீமீஸீ நீலீணீறீறீமீஸீரீமீ என்று சொன்னீர்களே...

பல ஆண்டுகளாக உங்களுக்கு நான் வைத்த ஒரு ஓபன் சேலஞ்ச் றிமீஸீபீவீஸீரீல் இருக்கிறது.என்னோடு நீங்கள் நேருக்கு நேர் மேடை ஏறத் தயாரா? அதிமுக ஆட்சி பற்றி நீங்கள் என்ன கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயார். திமுக ஆட்சி பற்றி எனது கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லத் தயாரா? ஓபன் சேலஞ்சுக்கு பிறகு முதல் கே ள்வி நீட் ரத்து என்னாச்சு? இவ்வாறு இபிஎஸ் கூறியுள்ளார்.

# இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தம்; அதிக வருமானம், வேலைவாய்ப்புகளை உறுதி செய்யும்; நியூசிலாந்து பிரதமர் மகிழ்ச்சி




இந்தியா, டிச.28-

இந்தியா உடனான தடையில்லா வர்த்தக ஒப்பந்தம், அதிக வேலைவாய்ப்புகள், வருமானத்தை உறுதி செய்யும் என நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் தெரிவித்தார்.

அண்மையில், தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக இந்தியாவும், நியூசிலாந்தும் அறிவித்தன. இரு நாட்டு பிரதமர்களும் தொலைபேசி வாயிலாக உரையாடி, இதை உறுதி செய்தனர். இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்படுவதாகக்கூறி நியூசிலாந்தில் அரசியல் எதிர்க்குரல்கள் எழுந்தன.

இந்த ஒப்பந்தத்தால் இறக்குமதி வரிக்குறைப்பு, தொழிலாளர் விதிகளில் சீர்திருத்தங்கள், பணி விசா விரிவாக்கம், இந்திய மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு ஆகியவை கிடைக்க உள்ளன. நியூசிலாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸ், ' இந்திய மாணவர்களுக்கு சலுகைகள் அளிப்பதால் நியூசிலாந்து மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு நெருக்கடி ஏற்படும்' என எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்த சூழலில், நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: எனது முதல் பதவிக்காலத்தில் இந்தியாவுடன் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவோம் என்று நாங்கள் கூறினோம், அதை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம், 140 கோடி இந்திய நுகர்வோருக்கான கதவைத் திறப்பதன் மூலம், அதிக வேலைவாய்ப்புகள், அதிக வருமானம் மற்றும் அதிக ஏற்றுமதிகளை உறுதி செய்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.




# புத்தாண்டு கொண்டாட்ட முன்னெச்சரிக்கை: டெல்லியில் 285 பேர் கைது ஆயுதங்கள், போதைப் பொருள் பறிமுதல்!

புதுடெல்லி, டிச.28-

புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு முன்னதாக, குற்றங்களைத் தடுக்கும் நோக்கில், டெல்லி காவல்துறை 'ஆகாத்' நடவடிக்கை என்ற பெயரில் நேற்று இரவு ஒரு பெரிய தேடுதல் வேட்டையை நடத்தியது. இதில் 285 பேர் கைது செய்யப்பட்டனர், மேலும், ஆயுதங்கள், போதைப்பொருட்கள் மற்றும் பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

டெல்லி புத்தாண்டு கொண்டாட்டங்களுக்குத் தயாராகி வரும் நிலையில், குற்றங்களைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, காவல்துறை டெல்லி முழுவதும் நேற்று ஒரே இரவில் தேடுதல் வேட்டையை நடத்தியது.

தென்கிழக்கு டெல்லி காவல்துறையால் 'ஆகாத் 3.0' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில், எளிதில் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் ஒருங்கிணைந்த சோதனைகள் மற்றும் தேடுதல் வேட்டைகள் நடத்தப்பட்டு தொடர் குற்றவாளிகள் குறிவைக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது, ஆயுதச் சட்டம், கலால் சட்டம், என்டிபிஎஸ் சட்டம் மற்றும் சூதாட்டச் சட்டம் ஆகிய பல்வேறு பிரிவுகளின் கீழ் 285 பேர் கைது செய்யப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது. இது தவிர, புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது ஏற்படக்கூடிய குற்றங்களைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 504 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பட்டியலில் உள்ள 116 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். இந்த சோதனைகளின் போது ஐந்து வாகனத் திருடர்களையும் காவல்துறை கைது செய்தது.

மேலும், 21 நாட்டுத் துப்பாக்கிகள், 20 தோட்டாக்கள் மற்றும் 27 கத்திகள் உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டன. போதைப்பொருட்கள் மற்றும் சட்டவிரோத மதுபானப் பொருட்களையும் காவல்துறை பறிமுதல் செய்தது. இதன் மூலம் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு முன்னதாக போதைப்பொருட்களை சந்தையில் புழக்கத்தில் விட நடந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இந்த தேடுதல் வேட்டையின்போது, திருடப்பட்ட 310 மொபைல் போன்கள், 231 இருசக்கர வாகனங்கள் மற்றும் ஒரு நான்கு சக்கர வாகனம் ஆகியவை காவல்துறையால் மீட்கப்பட்டன



# “தீவிரவாத இஸ்லாமிய அமைப்புகளுடன் கூட்டணி வைத்து கேரளாவை ஆபத்தில் ஆழ்த்துகிறது காங்கிரஸ்” பாஜக

திருவனந்தபுரம்:, டிச.28-

ஜமாத் இ இஸ்லாமி உள்ளிட்ட தீவிரவாத இஸ்லாமிய அமைப்புகளுடன் கூட்டணி அமைத்து கேரளாவையும் இந்தியாவையும் காங்கிரஸ் ஆபத்தில் ஆழ்த்துவதாக கேரள பாஜக தலைவர் ராஜீவ் சந்திரசேகர் கவலை தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் கேரளாவில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலின்போது, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயகக் கூட்டணிக்கு, தடை செய்யப்பட்ட பாப்புலர் ஃபிரண்ட் ஆப் இந்தியாவின் அரசியல் பிரிவான எஸ்டிபிஐ கட்சியும், ஜமாத் இ இஸ்லாமியின் வெல்ஃபேர் கட்சியும் ஆதரவளித்ததாகக் கூறப்படுகிறது. இதற்காக காங்கிரஸ் கட்சியை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்தன.

ஜமாத் இ இஸ்லாமி அமைப்பு பெரும்பான்மை முஸ்லிம்களால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதைப் பொருட்படுத்தாமல் அந்த அமைப்புக்கு நற்சான்றிதழ் வழங்கும் விதமாக அதனுடன் இணைவதா என்று முதல்வர் பினராயி விஜயன் காங்கிரஸ் கட்சியை விமர்சித்திருந்தார்.

இந்நிலையில், ஜனநாயக அமைப்புகளுக்குள் தீவிரவாத இஸ்லாமிய அமைப்புகள் ஊடுருவ அனுமதிக்கக்கூடாது என்று கேரள மாநில பாஜக தலைவர் ராஜீவ் சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ''கேரளாவில், ராகுல் காந்தியின் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய ஜனநாயக முன்னணி, ஜமாத் இ இஸ்லாமி உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளுடன் கூட்டணி அமைத்து கேரளாவையும், இந்தியாவையும் ஆபத்தில் ஆழ்த்துகின்றன.

நமது ஜனநாயகத்தை அச்சுறுத்தும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் ஒன்றுபட வேண்டும். தீவிரவாத இஸ்லாமிய அமைப்புகள் ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களுக்குள் ஊடுருவி மதச்சார்பின்மை என்ற போர்வையில் ஆதிக்கம் செலுத்த நாம் அனுமதிக்கக்கூடாது.

தீவிரவாதமும், பயங்கரவாதமும் சாதாரண மக்களை பாதிக்கின்றன; அவை நமது ஜனநாயகத்தையும் வாழ்க்கை முறையையும் அழிக்கின்றன. ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்தால் இதன் உண்மையான தாக்கம் தெளிவாகும்'' என தெரிவித்துள்ளார்.

தீவிரவாத இஸ்லாமிய அமைப்பான முஸ்லிம் பிரதர்ஹுட் அமைப்புக்கு எதிராக ஐக்கிய அரபு அமீரகம் எடுத்துள்ளதாகக் கூறப்படும் உறுதியான நிலைப்பாடு தொடர்பான ஒரு சமூக ஊடகப் பதிவை பகிர்ந்துள்ள ராஜீவ் சந்திரசேகர், ''இதைப் படியுங்கள் இஸ்லாமிய நாடுகள் கூட தீவிரவாத இஸ்லாமிய அமைப்புகளுக்கு எதிராக எவ்வளவு வலிமையான நிலைப்பாட்டை எடுக்கின்றன என்பதை இது காண்பிக்கும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.



# நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களில் 21ம் ஆண்டு சுனாமி நினைவு தினம் அனுசரிப்பு

நாகப்பட்டினம், டிச.28-

நாகப்பட்டினம் / மயிலாடுதுறை: நாகை, மயிலாடுதுறை மாவட்ட கடற்கரையோர பகுதிகளில் 21ம் ஆண்டு சுனாமி நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. 2004 ம் ஆண்டு டிச. 26ம் தேதி ஏற்பட்ட சுனாமி பேரலையில் தமிழகத்தில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

குறிப்பாக, நாகை மற்றும் வேளாங்கண்ணி பகுதிகளில் மட்டும் 6,065 பேர் உயிரிழந்தனர். அந்த மறக்க முடியாத வடுவாகிப் போன சுனாமி தாக்கி நேற்றுடன் 21 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது.

21ம் ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு, நாகை மாவட்டம் வேளாங்கண்ணி பேராலய அதிபர் இருதயராஜ் தலைமையில் மீனவர்கள், வணிகர்கள், பொதுமக்கள், அருட் தந்தைகள், அருட்சகோதரிகள் உள்ளிட்டோர் அமைதிப் பேரணியாக 3 கி.மீ. தொலைவு சென்று, அங்குள்ள நினைவு ஸ்தூபியில் மலர்கள் தூவி, மெழுகுவத்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.


இதேபோல, நாகை மாவட்டத்தில் உள்ள 25 கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று கடலுக்குச் செல்லாமல், அந்தந்த மீனவக் கிராமங்களில் உள்ள நினைவு ஸ்தூபிகளில் அமைதிப் பேரணி சென்று மலர் வளையம் வைத்து மவுன அஞ்சலி செலுத்தினர்.

நாகை கடற்கரையில் எம்.பி.செல்வராஜ், திமுக மாவட்டச் செயலாளர் கவுதமன், முன்னாள் அமைச்சர் மதிவாணன், வேளாங்கண்ணியில் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர்கள் ஓ.எஸ்.மணியன், ஜெயபால், ஜீவானந்தம் மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினரும் அஞ்சலி செலுத்தினர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தரங்கம்பாடி, பூம்புகார், திருமுல்லைவாசல், பழையாறு, வானகிரி உள்ளிட்ட 28 மீனவக் கிராமங்களிலும் சுனாமி நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது.

தரங்கம்பாடி பழைய ரயிலடி அருகே சுனாமியால் உயிரிழந்த 319 பேர்அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஏராளமானோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இதேபோல, காரைக்கால் கடற்கரையில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

# “கல்வி, கல்வி நிறுவனங்களை பலவீனப்படுத்த பாஜக ஆர்எஸ்எஸ் சதி” ராகுல் காந்தி



புதுடெல்லி, டிச.28-

கல்வி மற்றும் கல்வி நிறுவனங்களை பலவீனப்படுத்த பாஜக ஆர்எஸ்எஸ் கூட்டணி சதி செய்வதாக காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

இது குறித்து பேஸ்புக்கில் ராகுல் காந்தி வெளியிட்ட பதிவில், ''சமீபத்தில் ‘மக்கள் நாடாளுமன்றத்தில்’ ( Students' Parliament ) இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் (ISI) மாணவர்களைச் சந்தித்தேன். நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்து எழுப்பி வரும் அதே தீவிரமான கவலைகளை அந்த மாணவர்களும் எழுப்பினர்.

ஐஎஸ்ஐ நிறுவனம் படிப்படியாக ஆர்எஸ்எஸ் மூலம் நிறுவன ரீதியாகக் கையகப்படுத்தப்பட்டு வருவதாக மாணவர்கள் தெரிவித்தனர். ஐஎஸ்ஐ என்பது ஏதோ ஒரு சாதாரண நிறுவனம் அல்ல. அது புள்ளியியல், கணிதம், பொருளாதாரம், தரவு அறிவியல், கணினி அறிவியல் மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவற்றில் உயர் மட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, நாட்டுக்கு உலகத் தரம் வாய்ந்த நிபுணர்களை உருவாக்கியுள்ளது.

கல்வியாளர்களால் நடத்தப்பட வேண்டிய கல்வி நிறுவனங்கள் இப்போது அதிகாரத்துவ மற்றும் சித்தாந்தத் தலையீட்டை எதிர்கொள்கின்றன. பாடத்திட்டமும் ஆராய்ச்சியும் கூட ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இது கல்விச் சீர்திருத்தம் அல்ல, மாறாக இளைஞர்களின் எதிர்காலத்தை இருளில் தள்ளுவதற்காகவும், கல்வி மற்றும் கல்வி நிறுவனங்களை பலவீனப்படுத்துவதற்கான ஒரு சதித்திட்டம். இந்தத் தாக்குதல் நிறுவனங்கள் மீது மட்டுமல்ல, நாட்டின் அறிவுசார் சுதந்திரம், அறிவியல் மனப்பான்மை மற்றும் அதன் இளைஞர்களின் எதிர்காலத்தின் மீதும் தொடுக்கப்பட்டுள்ளது. இதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். கல்விக்கு சுதந்திரம் தேவை நிறுவனங்கள் சித்தாந்தத்தால் அல்ல, அறிவு மற்றும் அறிவியலால் இயக்கப்படும்.'' என்று கூறினார்.

ராகுல் காந்தி பேஸ்புக் பதிவில், அமெரிக்காவால் விதிக்கப்பட்ட வரிகளின் விளைவாக பதோஹியைச் சேர்ந்த நெசவாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாக கூறினார். அவர், “நான் ஏற்கனவே கூறியிருந்தேன் 'ட்ரம்ப்பின் வரிகள் ஒரு பொருளாதாரப் புயலாக மாறப்போகின்றன, இது மில்லியன் கணக்கான மக்களைப் பாதிக்கும். ஆனால் நரேந்திர மோடி அமைதியாக அமர்ந்திருக்கிறார். இன்று, பதோஹியின் நெசவாளர்கள் அதே எச்சரிக்கையின் யதார்த்தத்தை எடுத்துரைக்கிறார்கள். ஒரு காலத்தில் ‘கம்பள நகரம்’ என்று அழைக்கப்பட்ட பதோஹி, இப்போது அவதூறுக்கு ஆளாகியுள்ளது.

அமெரிக்காவின் இந்தியாவுக்கு எதிரான வரி விதிப்புக் கொள்கை நாட்டின் பல தொழில்களில் பயங்கரமான விளைவை ஏற்படுத்தியுள்ளது. அதனால் பதோஹியின் கம்பள வர்த்தகம் கிட்டத்தட்ட அழிக்கப்பட்டுவிட்டது. இதன் விளைவாக, ஏற்றுமதி சீராகக் குறைந்து வருகிறது. இந்த வர்த்தகம் வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளுக்கு மாறி வருகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் மக்களவைத் தொகுதியான வாரணாசியின் உண்மை நிலை இதுதான்.” என்று கூறினார்.



# திருப்பரங்குன்றம் மலை தர்காவுக்கு அசைவ பிரியாணிக்கு கொண்டு சென்றவர்கள் தடுத்து நிறுத்தம்!

மதுரை, டிச.28-

திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள சிக்கந்தர் தர்கா சந்தனக்கூடு திருவிழாவை முன்னிட்டு, அசைவ பிரியாணியை கொண்டுசென்ற கேரளம் மற்றும் தென்காசி முஸ்லிம்களை போலீஸார் தடுத்து நிறுத்தினர்.

முருகப்பெருமானின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் முருகன் கோயில் மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் டிசம்பர் 3ம் தேதி தீபம் ஏற்ற வேண்டும் என, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால் தமிழக அரசும், கோயில் நிர்வாகமும் தீபம் ஏற்ற அனுமதிக்கவில்லை. மேலும், அன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார் 144 தடை உத்தரவு பிறப்பித்தார்.

இதனால், மாநகரக் காவல் ஆணையர் ஜெ.லோகநாதன் தலைமையிலான போலீஸார், தீபம் ஏற்றச் சென்ற மனுதாரர் கள் உள்ளிட்டோரை தடுத்து நிறுத்தினர். அதையடுத்து, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கும், அரசின் மேல்முறையீட்டு வழக்கு விசாரணையும் நடந்து வருகிறது.

இதனிடையே, மலை மீதுள்ள சிக்கந்தர் பாதுஷா தர்கா சந்தனக்கூடு திருவிழா டிசம்பர் 21ல் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

19 நாட்களாக இருந்து வந்த போலீஸாரின் தடைகள் சந்தனக்கூடு திருவிழாவுக்காக அகற்றப்பட்டு, மலைக்குச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

இதனால், தினமும் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்தும், கேரள மாநிலத்திலிருந்தும் முஸ்லிம்கள் மலை மீதுள்ள சிக்கந்தர் தர்காவுக்குச் சென்று வருகின்றனர்.

இவர்களை போலீஸார் சோதனையிட்டு அனுப்பி வருகின்றனர். இந்நிலையில், நேற்று கேரள மாநிலம் மற்றும் தமிழகத்தின் தென்காசி பகுதியைச் சேர்ந்த 62 பேர் பழனியாண்டவர் கோயில் மலையடிவாரத்திலிருந்து மலைக்குச் சென்றனர்.

அவர்களை தடுத்து நிறுத்தி, அவர்கள் கொண்டுசென்ற பைகள், பாத்திரங்களை போலீஸார் சோதனையிட்டனர். அதில், அவர்கள் அசைவ பிரியாணி கொண்டு செல்வது தெரியவந்தது.

மலைக்கு மேல் அசைவ உணவுகள் கொண்டு செல்ல தடை உள்ளதாக தெரிவித்து, அவர்களை திருப்பி அனுப்பினர். ஆனால், அவர்கள் அருகிலுள்ள பள்ளிவாசலில் அசைவ பிரியாணியை வைத்து விட்டு மலைக்குச் சென்றனர்.

அப்போது, குழுவாக வந்த 62 பேரில் முதலில் 57 பேரை போலீஸார் அனுப்பினர். பின்னர், 5 பேர் அசைவ பிரியாணியை மற்றொரு இடத்தில் வைத்துவிட்டு, தாமதமாக தனியாகச் சென்றனர். போலீஸார் சோதனையில் அசைவ பிரியாணி கண்டறியப்பட்டதால், அங்கு திடீர் சர்ச்சை ஏற்பட்டது.

# உ.பி.யில் வளர்ப்பு நாய் இறந்த கவலையில் பட்டதாரி சகோதரிகள் தற்கொலை



புதுடெல்லி, டிச.28-

உ.பி.யில் வளர்ப்பு நாய் இறந்த கவலையில் பட்டதாரிகளான இரு சகோதரிகள் தற்கொலை செய்துகொண்டனர்.

லக்னோவின் ஜலால்பூர் பகுதியில் உள்ள தோதா கிராமத்தில் ராதா சிங் (24), ஜியா சிங் (22) எனும் சகோதரிகள் தங்கள் குடும்பத்துடன் வசித்து வந்தனர். இவர்கள் சிறுவயது முதல் டோனி எனும் பெயரில் ஜெர்மன் ஷெப்பர்ட் வகை நாயை வளர்த்து வந்தனர். இதன் மீது அளவுக்கடந்த பாசம் வைத்திருந்தனர். இந்நிலையில் 6 மாதங்களுக்கு முன் டோனி நோய்வாய்ப்பட்டு இறந்தது.

அப்போது முதல் சகோதரிகள் இருவரும் சோகத்தில் மூழ்கினர். இதன் உச்சமாக நேற்று இருவரும் பினாயில் திரவத்தை குடித்தனர். இதையடுத்து இருவரும் ராணி லட்சுமிபாய் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனால் வழியிலேயே ராதா உயிரிழந்தார். ஜியா சிகிச்சை பலனின்றி இறந்தார்.

உடல்நலம் குன்றிய டோனிக்கு தொடக்கத்தில் இருந்தே சிகிச்சை அளித்தும் அதன் நிலைமை மேம்படவில்லை. இது அவர்களை மன அழுத்தத்தில் ஆழ்த்தியது. இதில் இளைய சகோதரியான ஜியா சிங் முதலில் மனநலம் பாதிக்கப்பட்டார். டோனி இறந்த பிறகு ராதாவும் மனச்சோர்வு அடைந்தார். நாயின் இறப்பால் பொதுச் சமூகம் மற்றும் குடும்பத்திடமிருந்து முற்றிலுமாக விலகி, இருவரும் தனிமையில் வாழ்ந்து வந்தனர்.

இதுகுறித்து சகோதரிகளின் தந்தை கைலாஷ் சிங் (65) கூறுகையில், ‘‘டோனி உயிருடன் இருக்கும்போதே அது உணவருந்தாத நாளில் இருவரும் உணவருந்தவில்லை. அது இறந்த பிறகு இருவரும் வீட்டில் தனி அறையில் வாழ்ந்தனர். யாரிடமும் பேசுவதை நிறுத்தி விட்டனர். செல்போனும் பயன்படுத்தவில்லை.இது போன்ற பழக்கத்தால் அவர்களுக்கு பேய், பிசாசு பிடித்திருக்கும் என்ற சந்தேகமும் வந்தது. இதற்காக மருத்துவமனைக்கும் மந்திரவாதிகளிடமும் அழைத்துச் சென்றும் பலனில்லை’’ என்றார்.

இந்த சம்பவத்தை காவல்துறை தற்கொலை வழக்காக பதிவு செய்து விசாரித்து வருகிறது. வளப்பு நாய்க்காக உயிர் விட்ட பட்டதாரி சகோதரிகள் என சமூக வலைதளங்களிலும் இத்தகவல் வைரலாகி வருகிறது.

# உ.பி.யில் மாணவர்களுக்கு செய்தித்தாள் வாசிப்பு கட்டாயம்



லக்னோ, டிச.28-

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பது, திரையில் செலவிடும் நேரத்தை குறைப்பது, விமர்சன மற்றும் தர்க்கரீதியான சிந்தனையை வளர்ப்பது ஆகியவற்றை நோக்கமாக கொண்டு உ.பி. அரசு தனது கட்டுப்பாட்டில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் தொடக்கப் பள்ளி மாணவர்கள் கட்டாயம் செய்தித்தாள்களை வாசிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து கூடுதல் தலைமைச் செயலாளர் (தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி) பார்த்தசாரதி சென் சர்மா கடந்த 23ம் தேதி பிறப்பித்த உத்தரவில், "ஆங்கிலம், மற்றும் இந்தி செய்தித்தாள்கள் வாசிப்பது, பள்ளிகளின் தினசரி வாசிப்புக் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற்றப்பட வேண்டும். தினசரி செய்திகளை வாசிப்பதற்காக 10 நிமிடங்கள் ஒதுக்க வேண்டும்’’ என்று தெரிவித்துள்ளார்.

# “சமூக நீதி குறித்து பேசுவதற்கு திமுகவுக்கு தகுதியில்லை” : மதுரையில் அன்புமணி பேட்டி



மதுரை, டிச.28-

“சமூக நீதி குறித்து பேசுவதற்கு திமுகவுக்கு தகுதியில்லை” என மதுரையில் அன்புமணி கூறினார்.

மதுரையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக அன்புமணி ராமதாஸ் சென்னையிலிருந்து விமான மூலம் இன்று மதுரை வந்தார். மதுரை விமான நிலையத்தில் பாமக பொருளாளர் திலகபாமா வன்னியர் சங்க துணைத் தலைவர் நடராஜன், மாவட்ட செயலாளர் சண்முகநாதன், எஸ் கே தேவர், வீரகுமார் அழகர்சாமி, வழக்கறிஞர் செல்வம் உள்ளிட்ட நிர்வாகிகள் அவரை வரவேற்றனர்.

பின்னர் அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழ்நாட்டில் அன்றாடம் திமுக அரசுக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடைபெறுகின்றன. ஒரு பக்கம் ஆசிரியர்கள், இளநிலை உதவிப் பேராசிரியர்கள், துப்புரவு பணியாளர்கள், அரசு ஊழியர்கள், செவிலியர்கள், மருத்துவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் போராடி வருகிறார்கள். இன்னொருபுறம், பெண்கள் மதுக்கடைகளுக்கு எதிராக போராடுகிறார்கள். இப்படி தமிழ்நாட்டில் விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பு மக்களும் திமுக அரசை எதிர்த்துப் போராடி வருகிறார்கள்.

திமுக மீது மிகுந்த கோபத்தில் மக்கள் இருக்கிறார்கள். கொடுத்த வாக்குறுதிகளில் 13% மட்டுமே நிறைவேற்றி இருக்கிறார்கள். இதனால் அனைவரும் திமுகவுக்கு எதிராக வாக்களிக்க முடிவு செய்திருக்கிறார்கள். வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக படுதோல்வி அடையும் என்பதில் மாற்ற கருத்தே இல்லை.

அதேபோல தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வேளாண் துறை வளர்ச்சி சொல்ல முடியாத அளவுக்கு சரிவில் உள்ளது. கடந்தாண்டு மைனஸ் 3.8 சதவீதம், இந்த ஆண்டு மைனஸ் 1.8 சதவீதம். எந்த ஆட்சியிலும் இப்படி இருந்தது இல்லை.

விவசாயிகளின் பயிர் இழப்பீடு கடந்த ஆண்டு பாதிப்புக்கு இன்னும் இழப்பீடு கிடைக்கவில்லை. தமிழகத்தில் நிர்வாகம் என்று எதுவும் இல்லை, முதல்வருக்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. ஆனால் கடனை மட்டும் அதிகமாக வாங்கி இருக்கிறார்கள் 9,55,000 கோடி ரூபாய் கடன். இந்தியாவிலேயே அதிக கடன் வாங்கிய மாநிலம் தமிழ்நாடு தான். ரூ. 62,000 கோடிக்கு வட்டி கட்டுகிறார்கள். அதன் பிறகு தான் உத்தரபிரதேசம் ஆனால் தமிழ்நாட்டின் மூன்றில் ஒரு பங்குக்கும் மேல் மக்கள் உத்தரபிரதேசம் மாநிலத்தில் உள்ளனர்.

வீடு கட்ட கடன் வாங்கலாம் அங்கு வாழ்வதற்கு கடன் வாங்கக் கூடாது. அதைத்தான் தமிழக அரசு செய்கிறது. பணத்தை வைத்து கொள்ளை அடிக்கிறார்கள். தமிழகத்தில் கட்டுமானமே இல்லை. மணல் கொள்ளை உட்பட அமலாக்கத் துறை பட்டியல் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசு அதைப் பற்றி கவலைப்படாமல் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

கனிம வள கொள்ளை என்று நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். இதற்கெல்லாம் ‘காட்ஃபாதர்’ ஒருவர் தென் மாவட்டத்தில் இருக்கிறார். பெரிய பொறுப்பில் இருக்கிறார். மேற்கு தொடர்ச்சி மலை நமக்கு ஒரு வரம். அந்த மலையை அழித்தொழித்து நாசப்படுத்த வேண்டும் என்று முடிவில் இருக்கிறார்கள். உறுதியாக சிபிஐ விசாரணை வரும் அதில் மாற்றுக் கருத்து இல்லை.

சமூக நீதி பேசுவதற்கு திமுகவுக்கு தகுதியே இல்லை. தமிழ்நாட்டில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். 69% இட ஒதுக்கீடை பாதுகாக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள 365 சமுதாயங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். பயன்பெறாதவர்களை கண்டறிந்து அவர்களுக்கு உதவ வேண்டும். இதையெல்லாம் கணக்கெடுப்பு நடத்தினால் மட்டும்தான் தெரியும். அதைக்கூட நடத்த மாட்டேன் என்று சொல்லும் முதல்வரை பார்த்திருக்கீங்களா. அவர் தான் ஸ்டாலின். ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, ஒடிசா, பிஹார் என அனைத்து மாநிலங்களிலும் கணக்கெடுப்பு எடுத்துள்ளார்கள். அங்கு சமூக நீதியை நிலைநாட்டும் அரசுகள் உள்ளன. தமிழ்நாட்டில் சமூக அநீதி தான் உள்ளது. பெரியாரின் பெயரைச் சொல்ல தகுதி இல்லாதவர்கள்.

கர்நாடக உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதன்படி மாநில அரசும் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தி திட்டங்களை கொடுக்கலாம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். ஆனால் ஸ்டாலின் எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று பொய் சொல்கிறார். கணக்கெடுப்பு நடத்த என்ன பிரச்சினை.

இவ்வளவு அநியாயம் நடந்து கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியில். தொழில் முதலீடு வந்து விட்டதாக பொய்யான தகவலை பரப்பி வருகின்றனர். தற்போது நான் அது தொடர்பான ஆவணத்தை வெளியிட்டு இருக்கிறேன். 34 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கிறது, ரூ.11 லட்சத்து 32 ஆயிரம் கோடி முதல்வர் கிடைத்துள்ளது என்று பொய்யை முதல்வர் சொல்லி வந்தார். தற்போது புத்தகம் போட்டவுடன் வாயை திறக்கவில்லை. 8.8% தான் தொழில் முதலீடு வந்துள்ளது. ஒரு லட்சத்து 56 ஆயிரம் கோடிக்கு தான் ஒப்புதல் கொடுத்துள்ளார்கள். இந்த தேர்தலில் திமுக படுதோல்வி அடையும். இவ்வாறு அன்புமணி கூறினார்.

தொடர்ந்துகூட்டணி குறித்த கேள்விக்கு, “விரைவில் எங்கள் கூட்டணியை அறிவிப்போம். பேச்சுவார்த்தையில் இருக்கிறோம். எங்கள் கூட்டணி மிகப்பெரிய வெற்றியடையும். இன்றைய நிலவரப்படி கூட்டணி பற்றி என்னால் பேச முடியாது. ஆனால், பெரிய கூட்டணி முடிவாகும்.” என்றார்.

திருப்பரங்குன்றம் விவகாரம் குறித்த கேள்விக்கு, “ஆன்மிகத்தை வைத்து அரசியல் செய்யக்கூடாது இதுதான் நிலைபாடு. நீதிமன்ற தீர்ப்பை அரசு மதிக்க வேண்டும், சட்டம் ஒழுங்கு பிரச்சினை இல்லாத சூழலை உருவாக்க வேண்டும்.” என்றார்.

# சிவகாசி அருகே வீட்டின் இரும்பு கேட் பெயர்ந்து விழுந்து இரு சிறுமிகள் உயிரிழப்பு



சிவகாசி, டிச.28-

சிவகாசி அருகே கொங்கலாபுரத்தில் வீட்டில் இரும்பு கேட் பெயர்ந்து விழுந்ததில் விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுமிகள் இடிபாடுகளில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிவகாசி அருகே கொங்கலாபுரத்தை சேர்ந்தவர் ராஜேஸ்வரி. இவர் சிவகாசி நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறார். இவரது மகள் கமலிகா (9) சிவகாசியில் உள்ள பள்ளியில் நான்காம் வகுப்பு படித்து வருகிறார். ராஜேஸ்வரியின் தங்கை தனலட்சுமியின் மகள் ரிஷிகா (4). பள்ளி விடுமுறை என்பதால் கமலிகா, ரிஷிகா இருவரும் வீட்டில் விளையாடி வந்தனர்.வீட்டு வாசலில் விளையாடியபோது, வீட்டின் இரும்பு கேட் அஸ்திவாரம் பெயர்ந்து குழந்தைகள் மீது விழுந்தது. இதில் படுகாயமடைந்த குழந்தைகளை உறவினர்கள் மீட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தைகள் இருவரும் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இது குறித்து சிவகாசி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சிறு குழந்தைகள் மீது இரும்பு கேட் விழுந்து உயிரிழந்த சம்பவம் பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது

# பட்டா மாறுதலுக்காக ரூ.6 ஆயிரம் லஞ்சம்: சிக்கினார் விஏஓ

புதுக்கோட்டை, டிச.28-

புதுக்கோட்டை அருகே பட்டா மாறுதலுக்காக 6 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய விஏஓ ஜான் அருளப்பன் என்பவரை லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் கைது செய்தனர்.




புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அருகே பேராம்பூர் பகுதியை சேர்ந்தவர் அருளானந்த். இவரது நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்து இருந்தார். பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு, விராலிமலை வி.ஏ.ஓ., ஜான் அருளப்பன் லஞ்சம் கேட்டுள்ளார்.

லஞ்சம் தர விரும்பாத அருளானந்த், புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்தார். வி.ஏ.ஓ., அலுவலகத்தில் இருந்த ஜான் அருளப்பனிடம் 6 ஆயிரம் ரூபாயை அருளானந்த் கொடுத்தார். அப்போது, அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார், 6 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பணத்தை வாங்கும் போது ஜான் அருளப்பனை கைது செய்தனர்

# ஆப்கானிஸ்தானில் உணவுப் பஞ்சம் அதிகரிப்பு: ஐ.நா உதவுவதில் சிக்கல் நடப்பது என்ன?



காபூல், டிச.28-

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டத்துக்கான நிதி உதவியை அமெரிக்கா நிறுத்தியதை அடுத்து, ஆப்கானிஸ்தானில் லட்சக்கணக்கான மக்கள் பசி மற்றும் குளிரால் வாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மத தீவிரவாதத்தாலும், பொருளாதார நெருக்கடியாலும் ஆப்கானிஸ்தான் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்த நிலையில், தலிபான்களின் ஆட்சிக்குப் பிறகு அமலுக்கு வந்த சமூக கட்டுப்பாடுகளால் நிலைமை மேலும் சிக்கலாகி உள்ளது.

ஆப்கன் மக்களில் சுமார் 2.30 கோடி அதாவது அந்த நாட்டின் மக்கள் தொகையில் பாதி பேர் உதவி தேவைப்படும் நிலையில் உள்ளதாக கடந்த 22ம் தேதி செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு ஒரு கட்டுரை மூலம் தெரிவித்தது.

சர்வதேச நாடுகளின் உதவியுடன் உலக உணவுத் திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கன் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை உதவிகளை வழங்கி வந்தது.

இந்நிலையில், இந்த திட்டத்துக்கான நிதி உதவியை அமெரிக்கா தற்போது நிறுத்திவிட்டது. இதையடுத்து மிகுந்த கவலையை வெளிப்படுத்தி உள்ள உலக உணவுத் திட்டம், ஆப்கானிஸ்தானில் 1.7 கோடிக்கும் அதிகமான மக்கள் தற்போதைய குளிர்காலத்தில் குளிரோடு பட்டினியையும் எதிர்கொண்டு வருவதாக கடந்த வாரம் எச்சரித்தது. ஆபத்தான நிலையில் இருக்கும் மக்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 30 லட்சம் கூடி இருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

தலிபான்களின் ஆதிக்கம் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறி ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்குச் சென்ற ஆப்கன் அகதிகளில் பெரும்பாலானோர் அந்நாடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுவிட்டனர். இதன் காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில் 71 லட்சம் ஆப்கனியர்கள் நாடு திரும்பி உள்ளனர்.

தள்ளாடும் பொருளாதாரம், தொடர் வறட்சி, இரண்டு மிகப் பெரிய நிலநடுக்கங்கள், ஈரான், பாகிஸ்தான் நாடுகளில் இருந்து திரும்பிய மக்கள் ஆகியவற்றால் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ள நிலையில், உலக உணவு திட்டத்தின் உதவியும் பெருமளவில் குறைந்ததால் மக்களின் நிலை மேலும் மோசமடைந்துள்ளது.

பெண்கள் வேலைக்குச் செல்வதற்கு தாலிபான் அரசாங்கம் விதித்துள்ள கடுமையான கட்டுப்பாடுகளால் ஏராளமான பெண்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள்.

இந்த மாதத்தின் நடுப்பகுதியில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் பேசிய ஐ.நா. மனிதாபிமானத் தலைவர் டாம் பிளெட்சர், ‘‘நிலநடுக்கங்கள், மனிதாபிமான உதவிகளுக்கான அணுகல் குறைவு, வேலைக்குச் செல்வதில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் என ஒன்றோடு ஒன்று தொடர்புடைய அதிர்ச்சிகளால் ஆப்கனிஸ்தானில் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. பல ஆண்டுகளில், சர்வதேச உணவு விநியோகம் இல்லாத முதல் குளிர்காலம் இது.

2026ல் கிட்டத்தட்ட 2.2 கோடி ஆப்கனியர்களுக்கு ஐ.நாவின் உதவி தேவைப்படும். நன்கொடையாளர்களின் பங்களிப்பு குறைந்ததால், எங்கள் அமைப்பு உயிர் காக்கும் உதவி மிகவும் அவசரமாகத் தேவைப்படும் 39 லட்சம் மக்கள் மீது கவனம் செலுத்தும்.

கடந்த ஆண்டு பற்றாக்குறை காலத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களின் எண்ணிக்கை 56 லட்சமாக இருந்தது. அதாவது 56 லட்சம் பேருக்கு உதவிகள் வழங்கப்பட்டன. ஆனால், இந்த ஆண்டு இத்தகைய உதவிகளை 10 லட்சம் மக்கள் மட்டுமே பெற்றுள்ளனர்.

ஆப்கானிஸ்தானுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் அனைவருக்கும் நாங்கள் நன்றிக் கடன் பட்டவர்களாக இருக்கிறோம். ஆனால், 2026ம் ஆண்டு குறித்து யோசிக்கும்போது, உணவுப் பாதுகாப்பின்மை, சுகாதாரத் தேவைகள், அடிப்படை சேவைகள் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது’’ என வேதனை தெரிவித்துள்ளார்.




# திருப்பூர் மாவட்டம் மீன் வியாபாரிகள் நல சங்க ஆலோசனைக் கூட்டம்

திருப்பூர், டிச.28-

திருப்பூர் மாவட்ட மீன் வியாபாரிகள் நல சங்கத்தின் சார்பில் பிச்சம்பாளையத்தில் உள்ள தலைமை அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தலைவர் பார்த்தசாரதி அவை தலைவர் முகமது அலி தலைமையிலும் மாவட்ட பொருளாளர் முத்து முன்னிலையில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் கோடை சே அப்துல் காதர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார் ஆண்டு விழா நடத்துவது ஆம்புலன்ஸ் சேவை துரிதப்படுத்துவது என பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன இந்த நிகழ்வில் இணைச் செயலாளர் செல்வா மாநகர தலைவர் ஜபருல்லா மாநகரச் செயலாளர் ரஹ்மத்துல்லா மாநகரப் பொருளாளர் ராஜா முஹம்மது மாநகர துணை தலைவர் திருநாவுக்கரசு மாநகரை துணைச் செயலாளர் கணேசன் மூர்த்தி மாநகரை இணைச் செயலாளர் அப்பாஸ் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தேவேந்திரன் சம்சுதீன் தாஸ் ஆகாஷ் ராஜ்குமார் மஜீத் பரணி மாவட்ட இளைஞரணி செயலாளர் மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் முகம்மது ஹாரிஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர் நிகழ்ச்சியின் முடிவில் கடந்த சில தினங்களுக்கு முன்பு மறைந்த அலுவலக கட்டிட உரிமையாளர் சமூக சேவகர்மான ரங்கசாமி திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நன்றியுரை மாநகர செயலாளர் ரஹ்மத்துல்லா



■ திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை ஸ்ரீ தம்புலிங்கேஸ்வரர் திருக்கோவிலில் பகவான் ஐயப்பனுக்கு ஐயப்ப பக்தர்கள் நடத்திய மண்டல பூஜை சிறப்பாக நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற மண்டல பூஜை நிகழ்வில் மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட ஆன்மீக பரிசு போட்டிகள் மற்றும் திருவிளக்கு பூஜை மற்றும் கன்னி ஐயப்ப பக்தர்களுக்கு கன்னி பூஜை மண்டல பூஜை சிறப்பு பூஜை மற்றும் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஆன்மீகப் போட்டியில் கலந்து கொண்ட 100 ஐயப்ப பக்தர்கள் மற்றும் திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்ட 210 ஐயப்ப பக்தர்கள் திருக்கோவிலில் மாலை அணிவித்த 40 ஐயப்ப பக்தர்கள் என அனைவரது பெயர்களும் குலுக்களில் சேர்க்கப்பட்டு 50 நபர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. அதில் சிறப்பு பரிசான மரத்தினால் செய்யப்பட்ட பூஜை அறையை மணலி விளையைச் சேர்ந்த ஜெயந்தி சந்திரன் என்பவர் பெற்றார். அவருக்கான பரிசினை திருக்கோவில் நிர்வாகத்தின் சார்பாக டிபி சரவணன் கணேசன் தாயுமானவர் மற்றும் ஐயப்ப பக்தர்கள் பால விக்னேஸ்வரன் சுவாமிகள் பாலசுப்பிரமணியன் சுவாமிகள் ரமேஷ் சுவாமிகள் ஆகியோர் வழங்கினர். வழங்கினார். விழா ஏற்பாடுகளை திருக்கோவில் நிர்வாகியும் ஐயப்ப பக்தர்கள் குருசாமியு மான டிபி சரவணன் சிறப்பாக செய்திருந்தார்.



■ மதுரை மாவட்டம் ஆட்சியர் அலுவலகம் முன்பு ADAF அனைத்து துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக 21 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியத்தின் மதுரை மாவட்ட தலைவர் அ இளங்கோ அவர்கள் தலைமையில், மாநில செயலாளர் ந.சண்முகசுந்தரம், ஜாகிர் உசேன் முன்னிலையில், சுரேஷ் வரவேற்புரை ஆற்றி, சிறப்பு அழைப்பாளர் கண்டன பேருரையை மாநில பொருளாளர் திலகர் சிறப்புரை ஆற்றிய இக்கூட்டத்தில் பாலகுமாரன், ரவிக்குமார்,ரஃபிக் ராஜா, உமா மகேஸ்வரி, சங்கீதா, வேம்படியான், சரவணகுமார், இளமாறன், சுதாகர், செந்தில்குமார், ராஜேஷ், பாலமுருகன், சக்திவேல் அனைத்து அரசுதுறை சார்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு நிர்வாகிகள் பேருரை ஆற்றினர்.

# மதுரை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் மாவட்ட ஆட்சியர் தகவல்

மதுரை, டிச.28-

மதுரை மாவட்ட ஆட்சியர் தலைமையில் 30.12.2025 (செவ்வாய் கிழமை) காலை 10.00 மணியளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மக்கள் குறைதீர் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அன்றைய கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான கோரிக்கைகளை மனுக்களாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நேரடியாக அளிக்கலாம். மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கை மனுக்கள் அனைத்தும் உதவிகள் வாரியாக சம்பந்தப்பட்ட



அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில், உதவிகள் வழங்கிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, இந்த வாய்ப்பினை அனைத்து மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்தி கொள்ளுமாறும், அவ்வாறு மனு அளிக்க விரும்பும் மாற்றுத்திறனாளிகள் தங்களது மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையின் நகல், UDID card நகல் இருப்பிடத்திற்கான ஆதாரமாக குடும்ப அட்டையின் நகல், ஆதார் அட்டை நகல், பாஸ் போர்ட் அளவு புகைப்படம் 1 ஆகியவற்றுடன் 30. 12.2025 அன் று காலை 10.00 மணிக்கு நேரில் வந்து மனுக் களை அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக் குறிப்பில் தெரி வித்துள்ளார்.

# 30 ஆண்டுகளாக பட்டா கிடைக்காதவர்களுக்கு தீர்வு ஒரு ரூபாய் செலவில்லாமல் 350 பயனாளிகளுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி பட்டாக்களை வழங்கினார்

சின்னாளபட்டி, டிச.28-

திண்டுக்கல் மாவட்டம், சின்னாபட்டி சிறப்புநிலை பேரூராட்சி பகுதியில் வசிக்கும் 18 வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்கள் ஆத்தூர் தாலுகா அலுவலகத்தில் பட்டாவிற்கு விண்ணப்பம் செய்தால் அரசியல் கட்சியைச் சேர்ந்த புரோக்கர்கள் மற்றும் வருவாய்த்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் பட்டா கொடுக்ககூடிய இடத்தின் விலை மதிப்புக்கேற்றவாறு தொகையை நிர்ணயம் செய்து, ஒரு பட்டாவிற்கு ரூ. 50 ஆயிரம் முதல் 1 லட்சம் வரை பெற்றுக் கொண்டு பட்டா வழங்கி வந்தனர். காசு இல்லாதவர்களுக்கு பட்டா வழங்காமல் இழுத்தடித்து வந்தனர். தொடர்ந்து அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் பட்டா வழங்குவது சம்மந்தமாக புகார்கள் வந்ததை அடுத்து அதிரடியாக களத்தில் இறங்கி கடந்த ஜீலை மாதம் 2ம் தேதி சின்னாளபட்டி பேரூராட்சி பகுதிக்கு மட்டும் சிறப்பு பட்டா கோரிக்கை முகாம் நடத்தினார். இதில் பொதுமக்களிடமிருந்து 563 மனுக்கள் பெறப்பட்டது. கட்சி நிர்வாகிகள் யாரும் தலை யிடக்கூடாது, யாரிடமும் பட்டா கொடுக்கக்கூடாது என அமைச்சர் உத்தரவிட்டிருந்தார். இதில் சுமார்; 350 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கும் விழா



பேரூராட்சி அலுவலகதில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி தலைமை தாங்கினார். கோட்டாட்சியர் திருமலை, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலளார் பிள்ளையார்நத்தம் முருகேசன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் இளவரசி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் பொதுமக்கள் மத்தியில் பேசும்போது மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதல்வராக இருந்தபோது ஆத்தூர் தொகுதியில் நூற்றுக் கணக்கானோருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கினோம். குறிப்பாக சின்னாளபட்டி அருகே முருகன்பட்டியில் நூற்றுக் கணக்கானோருக்கு விலையில்லா பட்டாக்களை வழங்கி வீடு கட்டிக்கொடுத்தோம். சின்னாளபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட சத்யா நகர் பகுதி மக்களுக்கு விலை யில்லா பட்டாக்களை கொடுத்ததால் இன்ற அந்த இடத்தில் பல மாடி வீடுகள் உருவாகியுள்ளது. இது போல மேட்டுப்பகுதியில் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறோம் என சொல்லி பல வீடுகள் மற்றும் மாடி வீடுகளை இடிக்கவந்தபோது, அவற்றிக்கு பட்டாக்கள் வழங்கி அந்த வீடுகளை காப்பாற்றியது திமுக அரசு என பெருமிதமாக கூறினார். இப்போதும் இங்குள்ள அருந்ததியர்கள் சமுதாய மக்கள் தங்களுக்கு வீடுகள் வழங்கவேண்டுமென கோரிக்கை மனு கொடுத்துள்ளார்கள். ஒன்றை மட்டும் சொல்கிறேன், கொடு;த்த வாக்கை நிறைவேற்றாமல் இருக்க மாட்டேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு குடியிருக்க வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்றார். அப்போது அங்கிருந்த அருந்ததியர் சமுதாய மக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். நிகழ்ச்சியில் பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், முன்னாள் பேரூர் கழக செயலாளர் மோகன்ராஜ், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், மாவட்ட பிரதி நிதி ரவி தண்டபானி, எம்.வி.முருகன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், துணை அமைப்பாளர் மெல்வின், அரசு ஒப்பந்தாகரர்கள் விக்னேஷ்வரன், ஜீசஸ் அகஸ்டின் பேரூராட்சி சுகாதார அலுவலர் மணிகண்டன், சின்னாளபட்டி வருவாய் ஆய்வாளர் நாகேந்திரன், கிராம நிர்வாக அலுவலர்கள் ஜெயலெட்சுமி, காளிதாஸ், சரவணன், ராஜலெட்சுமி, மாளிகைபாறை, துப்புரவு மேற்பார்வையாளர் அகிலன், சரளா, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் ஹேமலதா தம்பிதுரை, ராஜாத்தி, வேல்விழி,சங்கரேஸ்வரி, சுப்ரமணி, ரவிக்குமார், ராஜசேகர், தாமரை செல்வி, சாந்தி, பேரூர் கழக திமுக பொறுப்பாளர்கள் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# முதல்வருக்கு வேலைப்பளு; இபிஎஸ் உடன் விவாதிக்க முடியாது: சொல்கிறார் கனிமொழி

சிவகங்கை, டிச.28-

முதல்வருக்கு வேலைப்பளு அதிகம், எனவே இபிஎஸ்சுடன் விவாதித்துக் கொண்டு இருக்க முடியாது என்று திமுக எம்பி கனிமொழி கூறி உள்ளார்.

கீழடியில் அவர் அளித்த பேட்டி;

கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்காக கொண்டு வரப்பட்ட திட்டம் தான் 100 நாள் வேலை வாய்ப்பு உறுதித்திட்டம். பாஜ ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த திட்டம் உறுதி செய்யப்படவில்லை. 40 நாள் வேலைத்திட்டம் என்பதே அதிகபட்சமாக இருந்தது.

இந்த திட்டத்தில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம் என்ற மாநில அரசின் உரிமை கூட பறிக்கப்பட்டு உள்ளது. முழு ஊதியத்தையும்




மத்திய அரசு தான் வழங்கிக் கொண்டு இருக்கும் நிலையில், அதையும் 6040 சதவீதம் என்ற அளவில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று இந்த திட்டத்தையே முடித்து விடுவதற்காக தடுத்து விடுவதற்காக செய்யப்பட்ட மாற்றங்களாக பார்க்கிறோம்.

கிராமப்புறங்களில் உள்ள மக்களின் பொருளதாரத்தை பாதிக்கக்கூடிய ஒரு சூழலை நாடு முழுவதுமே உருவாக்கிவிடும். அரசு திட்டங்களில் ஸ்டிக்கர் ஒட்டியவர்கள் யார் என்று நமக்கு நல்லாவே தெரியும். உலகம் முழுவதும் ஸ்டிக்கர் ஒட்டி பெருமை பெற்றவர் தான் இபிஎஸ்.

முதல்வருக்கு இருக்கக்கூடிய வேலைப்பளுவில் இவரோடு (இபிஎஸ்சை குறிப்பிடுகிறார்) எல்லாம் விவாதித்துக் கொண்டு இருக்க முடியாது. கட்சி யிலே எத்தனையோ பேர் இருக்கிறார்கள். யார் வேண்டுமானாலும் அவருடன் (இபிஎஸ்சுடன்) விவாதிக்க தயாராக இருப்பார்கள். அவர்களோடு விவாதிக்கட்டும். அதையும் தாண்டி சில கேள்விகள் இருந்தால் முதல்வர் நிச்சயமாக பதில் அளிப்பார்.

இவ்வாறு கனிமொழி

# பொதுமக்கள், வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதலை ஏற்கமுடியாது; ஐநா கண்டனம்

நியூயார்க், டிச.28-

பொதுமக்கள், வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என ஐநா கண்டனம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் மசூதி மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, ஐநா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



சிரியாவின் ஹோம்ஸில் உள்ள அலி பின் அபி தாலிப் மசூதியில் வெள்ளிக்கிழமை தொழுகையின் போது நடந்த கொடிய பயங்கரவாத தாக்குதலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பொதுமக்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

காயமடைந்தவர்கள் அனைவரும் விரைவாகவும் முழுமையாகவும் குணமடைய இறைவனிடம் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அன்டோனியோ குட்டெரெஸ் கூறியுள்ளார்.

# காந்திகிராம் பல்கலைக்கழகத்திற்கு தமிழ் கற்பதற்காக வாரணாசி இந்து பல்கலைக் கழகத்திலிருந்து 30 மாணவ மாணவிகள் வருகை

சின்னாளபட்டி, டிச, டிச.28-

'தமிழ் கற்கலாம்' என்னும் 10 நாள் தமிழ் கற்றல் பயிற்சியில் பங்கேற்பதற்காக உத்திரப் பிரதேச மாநிலம் வாரணாசி இந்து பல்கலைக்கழகத்திலிருந்து 30 மாணவ, மாணவிகள் செம்மொழியாம், தமிழ் கற்பதற்காகக் காந்திகிராமப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இது குறித்துப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ந.பஞ்சநதம் கூறியதாவது, தமிழ் கற்க வேண்டும் வேண்டும் என்ற குறிக்கோளுடன் உத்தர பிரதேச மாணவர்கள் காந் திகிராமம் வந்திருப்பது சிறப்பானதாகும். பிராந்திய அளவில் வேண்டுமானால் சிறு வேறுபாடுகள் இருக்கலாம். அவற்றையும் இன்றைய இளைஞர்கள் அனைவரும் தேசத்தின் கலாச்சாரத்தை, விழுமியங்களை, மொழிகளை, நவீன வளர்ச்சிகளைப் புரிந்துகொள்வது அவசியமாகும். நமது அகண்ட பாரத பூமியில் பேசப்படும்மொழிகள் ஒவ்வொன்றையும் நமது தாய்மொழிபோல் மதிக்க வேண்டும். நமது தேசிய மொழிகள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு உடையவை. மகாகவி பாரதியார் காசியில் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்து சமஸ்கிருதம் கற்றார். காசியின் சிறப்புகளைப் பாடினார், கட்டுரைகளாக எழுதி மக்களுக்குத் தெரியப்படுத்தினார். காசி மாநகரத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் நீண்ட காலத் தொடர்பு இருந்து வருகின்றது. தமிழர்கள் இங்கிருந்து காசி, மதுரா, ஹரித்துவார், ரிசிகேஷ் என்று புனிதப் பயணம் சென்று வருகின்றனர். தமிழ் கற்பித்தலோடு சிறப்புச் சொற்பொழிவுகள், கலந்துரையாடல் மற்றும் பாரம்பரியச் சுற்றுலா போன்றவற்றிற்கும் காந் திகிராம் பல்கலைக் கழகத்தில் கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரலாற்று முக்கியத்துவம் போன்றவற்றை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும். தமிழ் மொழியைச் சரளமாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இத்தகைய முயற்சியை எடுத்துள்ள மத்திய கல்வி அமைச்சகம், சென்னை ஐஐடி, செம்மொழித்தமிழாய்வு மத்திய நிறுவனங்கள் பாராட்டிற்கு உரியவை என்றார். தமிழ் கற்கலாம் என்ற இந்தப் பயிலரங்கினைப் பல்கலைக்கழகப் பதிவாளர் எம். சுந்தரமாரி, தமிழ்த்துறை முதுநிலைப் பேராசிரியர் ஒ. முத்தையா தகவல்தொடர்பு அலுவலர் பேராசிரியர் கேசவராஜராஜன் ஆகியோர் ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்துகின்றனர்.

மாணவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள புரதான சிற்பங்கள் மற்றும் மலைக்கோட்டை உட்பட பல்வேறு இடங்களை பார்வையிட்டு தமிழ் மொழி மற்றும் தமிழ் கலாச்சாரம் பற்றி தெரிந்து கொள்ள உள்ளனர். 'தமிழ் கற்கலாம்' பயிலரங்கின் நிறைவு விழா வரும் டிசம்பர் 30ஆம் தேதியுடன் நிறைவு பெறுகின்றது



SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000